# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 13,996 — 1964 මාර්තු 26 වැනි බ්‍රහස්පතින්දා — 1964.3.26

13,996 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு மாச்சு மாதம் 26 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 83 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 84 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. | 86 | [illegible] .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | [illegible] .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. | — | [illegible] .. | — |


### பதவிகள்—வெற்றிடம்

#### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) *நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் எனும் பதவிகளுக்குரிய காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டாலொழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

**குறிப்பு.**—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவராயும், வேண்டிய தகைமைகளைக் கொண்டவர்களாயுமுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிவின் ஒழுங்குவிதிக் கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடுவிக்கும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ. வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சாத்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில், தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சாத்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

## ஒலிபரப்பு, தகவற் பகுதி

### வயலின் வித்துவான் பதவி

### இலங்கை வானொலி வாத்தியக் கோஷ்டி

இலங்கை வானொலி தமிழ் வாத்தியக்கோஷ்டியின் வயலின் வாசிப்பதற்கு அனுபவம் வாய்ந்த வித்துவான்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. இசைப்பரிசோதனையில் சித்திபெறுதவர்களும் இலங்கை வானொலி இசைக் கலைஞர்களுள் " பி " பிரிவுக்குக் குறைந்த தரத்திலுள்ளவர்களும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. தற்போதுள்ள வாத்தியக்கோஷ்டி அங்கத்தினர்கள் விண்ணப்பிக்கலாம்.

2.. விண்ணப்பதாரர் கர்நாடக சங்கீதத்தில் விற்பன்னராயும் மெல்லிசை வாசிக்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும். அவர் சிறந்த பாடகராய் இருப்பதோடு இந்திய முறைப்படி ஸ்வரப்படுத்தி எழுதுவதிலும், ஸ்வரப்படுத்தி எழுதியதை வாசிப்பதிலும், இராகாலாபனையிலும் அனுபவ ஞானம் பெற்றிருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வாத்தியங்களை வாசிக்கும் திறமை மேலதிகமான யோக்கியதாம்சமாகக் கருதப்படும். அங்கீகாரம் பெற்ற இந்திய இசைக்கல்லூரிகளின் தராதரப் பத்திரம் பெற்றிருப்பின் விசேஷமாகக் கவனிக்கப்படும். தாங்கள் தேர்ந்தெடுக்கும் இசைக்கருவியை மட்டுமன்றி தாங்கள் வாசிக்கத் தகுதியுள்ள மற்ற இசைக்கருவிகளையும் வாத்தியக்கோஷ்டித் தலைவர் விரும்பும் போது வாசிக்க வேண்டுமென வாத்தியகோஷ்டி அங்கத்தினர் எதிர்பாக்கப்படுகிருர்கள்.

3. அங்கத்தினர் இரண்டு வருட ஒப்பந்தத்தில் முதலில் நியமனம் பெறுவர். ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இந்நியமனம் மீண்டும் புதுப்பிக்கப்படலாம். குறிப்பிட்ட தொகை மாதச் சம்பளமாக வழங்கப்படும். மேலதிகமான அலவன்சுகள் இடையா. ஒப்பந்தத்தில் வேறு விதமாகக் குறிப்பிட்ட இடங்களைத் தவிர மற்றப்படி ஒருமாத அறிவித்தல் கொடுப்பதன் மூலம் வேலையிலிருந்து விலகவோ, விலக்கவோ முடியும். வாத்தியக்கோஷ்டி அங்கத்தவர் வாரம் ஒன்றுக்கு சராசரி 48 மணிநேரத்துக்குக் குறையாமல் வேலை செய்ய வேண்டும். நியமன ஒப்பந்தம் பற்றிய மற்ற விபரங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

4. ரூபா 200 க்கும் 300 க்கும் இடைப்பட்ட தொகை சம்பளமாக நிர்ணயிக்கப்படும். யோக்கியதாம்சமும் அனுபவமும் உள்ளவர்களுக்கு இந்த அளவைக்குட்பட்ட தொகை சம்பளமாக நிர்ணயிக்கப்படலாம்.

5. விண்ணப்பதாரர் இலங்கையின் வம்சாவழிப் பிரசையாகவோ பதிவு செய்யப்பட்ட பிரசையாகவோ இருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் 10.4.64 க்கு முன் கிடைக்கத்தக்கதாக ஒலிபரப்பு தகவல் மா–அதிகாரி, தபால் பெட்டி இலக்கம் 574, கொழும்பு 7 என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் மற்றக் கடிதங்களும் ஒலிபரப்பு தகவல் மா–அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இந்தப் பகுதியிலுள்ள எந்த உத்தியோகத்தருடைய பெயருக்கும் விலாசமிட்டு அனுப்பப்படலாகாது.

8. விண்ணப்பங்கள் கிடைத்த விபரத்துக்குப் பதில் அனுப்பப்பட மாட்டாது.

எஸ். பி. சேனநாயக்கா,
பதில் ஒலிபரப்பு தகவல் மா–அதிகாரி.

1964 ம் ஆண்டு மாச்சு மாதம் 18 ந் தேதி.
கொழும்பு 7,

3–960—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மத்திய எழுது வினைஞர் பரீட்சை—செப்டம்பர், 1962

3.1.64 ம் திகதியுடைய 13,901 ம் இலக்கமுடைய அரசாங்க செய்தி மடலிலுள்ள 28.12.63 ந் திகதியுடைய அறிவித்தலைத் தொடர்ந்து அறிவிப்பது. என்னவென்ருல் கீழ்க்காணும் அபேட்சகர்களை 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த மத்திய எழுது வினைஞர் சோதனையின் மறுமொழிகள்படி, புகையிரதப் பகுதி பொதுத் தர எழுதுவினைஞர் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

| பெயர் | விலாசம் |
|---|---|
| அம்மாசோனு, ஜி. ஏ. | கொட்டகண்ட, அபுருகல |
| அத்துருசிங்க, டி. ஆர். | பட்டகொடை, கல்பொத்தா |
| ஆல்பெரட், எஸ். | 37/2, மூர் வீதி, யாழ்ப்பாணம் |
| ஆரியவன்சா, எம். கே. | தலைமை ஆசிரியர் மேற்பார்த்து, கே/மாவத்தகொடை முதனிலை, பள்ளிக் கூட்டம், அபுடுகொடை |
| உக்குபண்டா, எச். எம். | போகமுவா, போயகன, குருனுகல் |
| எதிரிசிங்க, யு. ஆர். | காணிப்பகுதி, கச்சேரி, களுத்துறை |
| ஏகநாயகா, வி. ஆர். | உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி, கச்சேரி, கொழும்பு |
| என்சன், எம். கே. | மரிக்கையாவத்தை, தல்பை வடக்கு, உணவத்துன |
| ஏரத், எச். எம். டி. பி. | டெகிடேனியா, முருத்தலாவ |
| ஏரத், சி. சி. | சி. 51, போக்கலவெல், அம்பத்தென |
| ஏரத், எஸ். ஜே. | கெங்கால, கண்டி |
| ஏம்பால, டபிள்யு. கே. | " வெலிடல ", வீரப்பன, ஓப்பாத்தா |
| ஏவவிஸ்ஸா, டி. பி. | 137, ஏபவிஸ்ஸா, மரசன்ன |
| காரளசிங்கம், எம். | 2, சீனியர் வீதி, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம் |
| கருணரத்தின, ஈ. ஏ. | வலக்கும்புரா, அலாவ |
| கருணதாச, டி. ஜி. | கொம்பல, இமடுவா |
| கார்டின், கே. | கிரிமெட்டியா, ரட்கமா, டொடன்டுவா |
| காமினிடாசா, எம். டி. | உணவு ஆணையாளர் பகுதி, 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 |
| கிருஷ்ணமூர்த்தி, டபிள்யூ. | 196, ஜம்பற்ரு வீதி, கொழும்பு |
| குணசேகரா, கே. டி. | கல்கொட்டியா, ஆங்கம |
| குணசேகரா, என். டி. | 26, விசாக வீதி, கம்பகா |
| குணசேகரா, என். ஏ. ஏ. டி. | அதரகெதர வத்தை, கனேகம, படிகம |
| குணபாலா, ஜே. கே. ஏ. | வெலிமடைவத்தியா, நயிம்பல, திகாகொடை |
| குணத்திலகா, யு. எச். | திலகா, வெலகொடை, மாத்தறை |

| பெயர் | விலாசம் |
|---|---|
| சந்திரசேன, எல். எச். | வில்கமுவா, மாத்தல |
| சந்திரதாச, எச். ஏ. | முக்கலனியா, கிரிண்டவா, குருநாகல் |
| சந்திரதாச, டி. எல். ஏ. | கோட்டத்திற்குரிய அலுவலகம், நாட்டுக்குரிய வீடமைப்பு, மத்திய சந்தை, கண்டி |
| சத்தியபாலா, எஸ். | உகொடகவற்க, அடலடவா, யறிறியான |
| சானேரிஸ், பி. ஏ. | நெடிகமில்லே, கொஜமுவா, திசமாரம் |
| சிவஞானம், சி. | சந்திரிக்குலங்குளம், வவுனியா |
| சிற்றம்பலம், பி. | கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| சிவபாதம், டி. | ஏகாம்பரம் வீதி, திரிகோணமலே |
| சிரிசேன, டி. | வெலகொடஎன, நக்குலுகமுவா, கலாகம |
| சிரிசேன, ஏ. கே. | கம்பரகெதர, அமரதுங்கம, உஸவேவா |
| சில்வா, எம். எஸ். | 139, கட்டுகொட |
| செல்வவிநாயகம், வி. | வேத்திய இலங்கை ஆகாயப்படை, தபால் பெட்டி இல. 594, கொழும்பு 2 |
| சோமபால, எஸ். ஏ. | கங்குல்வொட்டியா வத்தை, இரத்தினபுரி |
| சுப்பிரமணியம், பி. | சுளிபுரம் கிழக்கு, சுளிபுரம் |
| சுபசிங்கா, ஆர். பி. | " சினவிலா ", இடல்கசீன |
| சூரியஆராச்சி, எச். எஸ். | கோட்டத்துக்குரிய கமம் அலுவலகம் |
| டயஸ், ஜே. பி. ஆர். | பத்தடுவன, மினுவாங்கொடை |
| டயஸ், எம். டி. எம். | 14/2, " சிரிசைசரு ", வெலபடை, பாணந்துறை |
| டி சில்வா, ஆர். எம். | 10, யூனியன் பிளேஸ், தெஹிவலே |
| தசநாயகா, என். ஈ. | நயிவல வீதி, உடுகம்பொல |
| தர்மசேன, கே. எம். எச். பி. | உனுபொலகம, கிரத்தலான, நெகம்பகா |
| தல்பதாடோ, கே. ர. ஜெ. எப். | 7, மினுவாங்கொடை வீதி, நீர்கொழும்பு |
| தனபாலா, கே. ஜி. | தொரனகொண்ட, உடுகம்பொலே |
| தனசிரி, யூ. டபிள்யு. | நிந்தனே, பட்டப்பொல |
| திசநாயகா, கே. எம். | கிராமச்சங்க அலுவலகம், குருவித்தை |
| திசநாயக, ஆர். எம். | அலுத்கெதர, கம்மானே, பொத்துகர |
| திலகரத்தின, ஈ. எ. | வெலிவிட்டியா, உனன்விட்டியா, படேகமா |
| திலகரத்தின, பி. ஏ. | குலுப்பான, பொக்குனுவித்தை |
| தேவித், கே. ஆர். | கனிகிகம, பெப்பிலியாவல |
| பண்டிஸ், ஜெ. எஸ். | மிக்கண்டமுல்ல, அத்துரேலியா, அகுரச |
| பிரசாத், பீ. பீ. | புளியங்கூடல் வீதி, கைட்ஸ் |
| பியசேன, கே. எம். | பிரகஸ்பிட்டியா, ஆலி எல |
| பியதாசா, டி. | கெதரவால, டொரவக்க |
| பியதாசா, டி. பி. | அத்தனகல, ஊரப்பொல |
| பியதாசா, எல். | ரத்மல்கொட, பொருவாண்ட |
| பிரமச்சந்திரா, பி. ஜி. | ரேஜர்சொங்கமா, திஸ்பான, நாவலப்பிட்டி |
| பீட்டர், வி. | தொரப்பே, அங்குலுகா |
| புன்ச்சிரலா, என். கே. | லசாலுவத்தை, தெரனியகல |
| பெரேரா, எச். எம். | தொலைச்செய்திப் போக்குவரத்து அலுவலகம், கொழும்பு |
| பெரேரா, ஜி. டபிள்யு. | மகாவத்தை, பமுனுகம |
| பெரேரா, கே. ஏ. ஈ. | சித்த எலியா, நுவரெலியா |
| பெர்னாந்து, யூ. என். பி. | 300, கே. எம். வி. வீதி, லக்சபதியா, மொரட்டுவா |
| பெர்னாந்து, எம். ஈ. சி. | 9, விவேகராம வீதி, களுத்துறை |
| பெர்னாந்து, எச். ஆர். எஸ். | 103, மாவத்தகம, பாதுக்கா |
| பெர்னாந்து, கே. ஆர். | 63, கோவில் வீதி, பேருவல |
| பொடிசிங்கோ, எம். ஜி. | வெலகெதர, ரத்மலக்கடுவா, கம்பலே |
| ராம் பண்டா, ஏ. எம். | கொடமுன், உடிஸ்பத்துவா |
| ரத்நாயக, ஜே. எம். | சந்தனகம, குருகோடல்ல |
| ரத்நாயக, எச். எம். | பகல அலடோர, கோபைகன |
| ரத்நாயக, எம். பி. | 40, அத்தலகொட வீதி, வத்தகம |
| ரானவீரா, டபிள்யூ. | கனத்தை வீதி, பத்துவத்தை, டொடன்டுவா |
| ரானதுங்க, எஸ். ஜி. | யொங்கமுல்ல, யக்கல |
| ரானசிங்க, டபிள்யூ. ஆர். ஏ. எஸ். | 350, மகர, நுககொட, கடவத்தை |
| ரூபசிங்க, யூ. எஸ். ஏ. | நகல்ல, தெபோட |
| ரோமியல், கே. ஜி. | வெரல்லகம, மரவானகொட |
| லயனல், ஜி. எல். | இம்புல்காவத்தை, பெரத்துடுவா, கோனப்பீடுவா |
| வியனக, பீ. யு. | " தேவிதூன் சேவன ", கம்புருபிட்டியா |
| வனகசேகர, ஏ. டபிள்யு. | 63/2, ரத்தினபிட்டி ரோட் கங்கொடவில்லே, நுகேகொடை |
| விதானஆராச்சி, டி. பி. | பொலிஸ் மத்திய கொட்டகை, நாரம்பிட்டி |
| விக்கிரமதிலாகா, வீ. | ஓமடொல, உருகம, காலி |
| விக்கிரமசிங்கா, ஏ. டபிள்யூ. | முதனிலேப் பள்ளிக்கூடம், தெனியா |
| விஜயரத்தின, எச். கே. | 63/2, ரத்தினபிட்டி வீதி, கங்கொடவில்லே, நுகேகொட |
| விஜயசுந்தரா, டி. எஸ். | மின்னேரியா |
| வில்மன் சிங்கே, எம். வி. | மாரம்பே, கெற்றஎற்ற |
| வில்பர்ட், கே. ஆர். | 326/21, அம்பலடுவா, தங்கெதர, காலி |
| வில்பிரட், எம். ஏ. | எம். டபிள்யூ. பீரிஸ் மேற்பார்த்து, அரநாயக, மாவனல்ல |
| வீரதிலகா, ஏ. எம். | துவவல, கொஸ்வத்தை |
| மாதுருசிங்கா, பீ. | 20, " மாதுருசிரி ", கிரிப்ஸ் வீதி, காலி |
| மாணிக்கவாசகர், எம். டபிள்யூ. | சேலனே வடக்கு, சேலனே |
| தத்தசேன, கே. டி. | கல்புகம, வஸ்கடுவா |
| ஜயசேகரா, ஏ. பி. டி. | கே/வேவகம |
| ஜயசேன, பி. எம். | 41, மவ்ண்ட் மேரி வீதி, கொழும்பு 10 |
| ஜயலத், எல். | உடுவ தெற்கு, குடஉடுவ |
| ஜயசுந்தர, டி. ஐ. | வேலையாளர் சகாய நிதி அலுவலகம், தபாற் பெட்டி இல. 1508, வேலையாளர் பகுதி, கொழும்பு |

| பெயர் | விலாசம் |
|---|---|
| ஜினதாச, பி. | பரகஸ்தோட்ட |
| ஜியதாச, டபிள்யு. டி. | டாகோன்ன, டெமன்அண்டியா |
| ஜினதாச, ஏ. எம். பி. | " தம்பசேவன.", கலான்ச்சியா, கல்கமுவ |
| ஜஸ்டின், எம். டி. | 37 ஏ, பட்டகம் வடக்கு, ஜாயல்லே |

2. இவ்வபேட்சகர்களுக்கு உடனே நியமனங்கள் கொடுக்க அரசாங்கம் பொறுப்பேற்கவில்லை. ஆனல் காலி இடங்கள் வர நியமனங்கள் கொடுக்கப்படும். நியமனம் கொடுக்கப்பட்டவர்களை மூன்று வருடம் தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படும். இவர்கள் வைத்திய சோதனைக்கும் புகையிரதப் பகுதி எழுதுவினைஞர் சேவை நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

3. புகையிரதப் பகுதி பொதுத் தலைவர் அபேட்கர்களுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொள்வார்.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1964 ம் ஆண்டு மார்ச் மீ 18 ந் உ.

கீர்த்தி வீரக்கொடி,
திறைசேரி பதில் காரியதரிசிக்காக.

3-964—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

1964 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ந் திகதியிட்ட 13,956 இலக்கங் கொண்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட மன்னர் உப. பிரிவின் கீழ் உள்ள மோதரகம ஆறு உள் செலுத்தும் வாய்க்கால் சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் 21.4.64 வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1964 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ந் திகதி வரைக்கும் விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1964 ம் ஆண்டு மாச்சு மாதம் 19 ந் திகதி.

3-948—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

## நீர்ப்பாசனத் திணைக்களம்

இத்தால் அறிவிக்கப்படுவது என்னவென்றால் 21.2.64 ல் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இல. 13,956 (பகுதி I தொகுதி II) ல் குறிப்பிட்ட சுங்கன்குளிக்குளம் புனருத்தாரண வேலைக்கான கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 14.4.64 காலை 10 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி 10.4.64

வே. சி. வேலுப்பிள்ளை,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
திருகோணமலை உப பிரிவு.

உள்த்துறைமுகத் தெரு,
திருகோணமலை,
1964 ம் ஆண்டு மாச்சு மீ 18 ந் தேதி.

3-992—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராத உபபிரிவு

பெலிகமுவ—நில்லகமுவ—தேவ கூவ ரோட்டுக்கு கல்லுப்போட்டு தார் ஊற்றுதற்கான கேள்விப்பத்திரம் அனுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாணப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1964 ம் ஆண்டு சித்திரை மாசம் 21 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் மேற்படி வேலைக்கு 44,000/- ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவு செயயப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவக நேரத்தில் 1964 ம் ஆண்டு சித்திரை மாசம் 17 ம் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கவே ண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயனப்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50/- கேள்விக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுக் சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அனுராத உப பிரிவு.

அனுராதபுரம்,
1964 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 9 ந் திகதி.

3-943—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மகா கனதராவை உப பிரிவு

எம். கே. எல். 1—மகா கனதராவைத் திட்டத்தில் வலதுபக்க IV ம் பிரிவில் 5 மைல் 37 சங்கிலி துவக்கம் 6 மைல் 20 சங்கிலி வரையும் வலது பக்க பிரதான வாய்க்கால் அமைத்தல்—ரூபா 36,000/-

எம். கே. எல். 2—மகா கனதராவைத் திட்டத்தில்—வலதுபக்க IV ம் பிரிவில் கிளை வாய்க்கால்களும் கை வாய்க்கால்களும் அமைத்தல்—ரூபா 44,000/-

எம். கே. எல். 3—பறங்கிய வாடிய குளத்தில் 150 அடி நீளமுள்ள வான் அமைத்தல்—ரூபா 21,000/-

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் அனுராத புரத்திலுள்ள பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளரினுல் 1964 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஒவ்வொரு வேலையின் விபரத்துக்கு முன் குறிப்பிடப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்களுக்காகிய வெற்றுப் பத்திரங்கள் மிகின்தலையிலுள்ள மகாகனதராவை திட்டத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக் நேரங்களில் 1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 28 ந் திகதி துவக்கம் ஏப்ரல் மாதம் 3 ந் திகதிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் எம். கே. எல். 1 க்கும் 2 க்கும் ரூபா 50/- வீதமும், எம். கே. எல். 3 க்கு ரூபா 25/- கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டு காட்டினுலும் போதுமானது.

4. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலத்தில் அலுவல நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகசுந்தரம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மகா கனதராவை உப பிரிவு.

மிகின்தலை,
1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 17ந் திகதி.

3-1001—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

## கடற்றொழிற் பகுதி

### மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 12 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தாங்குடியில் 12 கடற்றொழிலாளர் வீடுகளை நிர்மாணிப்பதற்காய கேள்விகள் காலிமுகம், கொழும்பு 3 லுள்ள கடற்றொழிற் பகுதிக் கேள்விச் சபைத் தலைவராவர்களால் 1964 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 22 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையுமேற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 லுள்ள கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரட்டை பிரதியில் அனுப்பப் படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள், அரசாங்கத்துடன் கட்டிட வேலைகளுக்கான ரூபா 50,000/- க்கும் அதற்கு மேலும் பதிவு செய்தோருக்கு மாத்திரம் 1964 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 20 ம் திகதி பிற்பகல் 3 மணிவரையும் வழங்கப்படும்.

3. காலிமுகம், கொழும்பு 3 லுள்ள கடற்றொழிற் பகுதித் தலைமைக் காரியாலயத்திலாவது அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள எந்தக் கச்சேரியிலாவது ரூபா 100/- வைப்புப் பணமாகக் கட்டி கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் பொழுது இத்தொகைக்காய பற்றுச் சீட்டைக் காண்பிக்கவேண்டும்.

4. ஏனைய விபரங்களைக் கடற்றொழில் அதிபரவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
கொழும்பு 3,
1964 ம் ஆண்டு மார்ச்சு மீ 18 ந் உ.

3-834—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

## கடற்றொழிற் பகுதி

### பேசாலையிலுள்ள கடற்றொழிற் பகுதி ஐஸ் உற்பத்திப் பொறித் தொகுதியிலுள்ள எண்ணெய் இயந்திரத்தைக் கழற்றுவதற்கும் மின்விசை மோட்டோர் ஒன்றை விநியோகித்து நிறுவுவதற்குமாய கேள்விகள்

பேசாலையிலுள்ள கடற்றொழிற் பகுதி ஐஸ் உற்பத்திப் பொறித் தொகுதியிலுள்ள எண்ணெய் இயந்திரத்தைக் கழற்றுவதற்கும் மின்விசை மோட்டோர் ஒன்றை விநியோகித்து நிறுவுவதற்காய கேள்விகள், காலிமுகம், கொழும்பு 3 லுள்ள கடற்றொழில் அதிபரவர்களால் 1964 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 24 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 250/—.

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
காலிமுகம், கொழும்பு 3,
1964 ம் ஆண்டு மார்ச்சு மீ 17 ந் உ.

3-898—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

## கடற்றொழிற் பகுதி

### உலர்ந்த சுறுமீன் செட்டைகள் கொள்வனவுக்காய கேள்விகள்

உலர்ந்த சுறுமீன் செட்டைகள் கொள்வனவுக்காய கேள்விகள், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அதிபரவர்களால் 1964 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 50/—.

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
காலிமுகம், கொழும்பு 3,
1964 ம் ஆண்டு மார்ச்சு மீ 17 ந் உ.

3-902—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

## பொது வேலைப் பகுதி

இரத்தினபுரி மாவட்ட அரசினர் கட்டிடங்களை 1963/64 ம் ஆண்டு பராமரிப்பதற்கும் சிறிய திருத்தங்கள் செய்வதற்கும் கேள்விப்பத்திரங்கள் சப்பிரகமுவ மாவட்ட பொது வேலைப்பகுதி மேற்பார்வைப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 29 ம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இக்கேள்விக்காய வெற்றுப் பத்திரங்கள் இரத்தினபுரி பொது வேலைப்பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். இக்கேள்வியைப் பற்றிய மேலதிக விபரங்கள் எல்லாவற்றையும் அதே பொது வேலைப் பகுதிப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் இரண்டு வெற்றுப் பத்திரங்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

3. பொது வேலைப் பகுதித் திணைக்களத்தில் கட்டிடம் நிர்மாணிப்பதற்கு ரூபா 28,000/- க்குக் குறையாமல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். விண்ணப்பக்காரர்களுக்கு, கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமையவே வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படும் :—

(அ) பதிவை நிரூபித்தல் ;

(ஆ) மேற்கூறிய பொறியலாளரின் பெயருக்கு ரூபா 50/- கேள்விக் கட்டணமாகச் செலுத்திய பற்றுச் சீட்டை 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்குள் வழங்குதல்.

4. கேள்விக்கட்டணம் கொழும்பு பொது வேலைப் பகுதித் தலைமைக் காரியாலயத்திலும், கொழும்பிற்கு வெளியில் உள்ள எந்தக் கச்சேரியிலும் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெறலாம்.

க. துரைசிங்கம்,
சப்பிரகமுவ மாவட்ட பொதுவேலைப்பகுதி
மேற்பார்வைப் பொறியியலாளர்.

இரத்தினபுரி,
1964 ம் ஆண்டு பங்குனி மாதம் 19 ம் திகதி.

3-942—26.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,996

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.